

# அதிதூதர் புனித மிக்கேல்

வரலாறு, மன்றாட்டு, நவநாள், சிங்காரமாலை, பாடல்கள்

# அதிதூதர் புனித மிக்கேல்

வரலாறு, மன்றாட்டு, நவநாள்,
புகழ்மாலை, சங்காரமாலை, பாடல்கள்

M.S.J. தங்கசாமி M.A., B.T.
Dip. in X'ian Doctrine & Morals

நாஞ்சில் புக் ஸ்டால்
நாகர்கோவில் - 1

# முன்னுரை

தூய மிக்கேல் அதிதூதர் வரலாறும், சங்கார மாலையும், மற்றும் செபங்களும் சேர்ந்து ஒரு நூலாக வெளிவந்தால் மக்களுக்கு நலன் மிக விளைவிக்கும்" - என்று நாஞ்சில் புத்தக நிறுவன உரிமையாளர் திரு. N.D. ஜோசப் அவர்களின் விருப்பத்திற்கேற்ப இந்நூல் எழுதப்படுகிறது.

நாஞ்சில் நிறுவனம் இம்மாதிரியான பல பக்தி புத்தகங்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைவதில் நானும் ஒருவன்.

அதிதூதரைப் பற்றிய விவிலிய மேற்கோள்களும் எடுத்தாளப்பட்டுள்ளது. மேலும் படிப்போருக்கு இது மிக பயன் விளைவிக்கும் எனக் கருதி எழுதுகிறேன்.

தூய மிக்கேல் அதிதூதர் மீது நாம் அசையாத பக்தி பூண்டிட இந்நூல் உதவும். இச்சீரிய பணியினை நான் செய்திட வாய்ப்பளித்த அதிதூதருக்கு எனது தாழ்மையான நன்றி, அவர் புகழ் ஓங்குக!

இறைவனின் திருப்பெயர் புகழப்படுக.

M.S.J. **தங்சாமி** M.A.B.T.

## பதிப்பகம் பகர்வது

நவ விலாச வான தூதர்களின் தலைவரான அதிதூதரின் பெயரில் எந்த ஏடும் சிறப்பாக காணப்படாமையால், அக்குறையை நீக்கி, அதிதூதரின் புகழ் சிறக்க ஒரு நூல் தயாரித்து வெளியிட வேண்டுமென்ற, எனது நீண்ட நாள் ஆவலை, மதிப்புமிகு M.S.J. தங்கசாமி M.A.B.T., அவர்கள் எளிய நடையில், இந்நூலை எழுதித் தந்தமைக்கும், இந்நூலை அச்சிட அனுமதி அளித்த கோட்டாறு மறை ஆயர் அருட் பெருந்தகை ம. ஆரோக்கியசாமி அவர்களுக்கும், தணிக்கை செய்த குருகுல முதல்வர் பேரருட் திரு. S. பர்ணபாஸ் அவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் வெளிவர ஊக்கமளித்த அருட்திரு. M. லாரன்ஸ் அடிகளாருக்கும், மற்றும் ஆலோசனைக்குரிய அன்பர்களுக்கும், அச்சிட்ட எமது அச்சக ஊழியர்களுக்கும் எம் நன்றி.

புதுமைகள் பல புரியும் அதிதூதர் புனித மிக்கேல் வரலாறை வெளியிடுவதால் தூயவர் வழியாக பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கு நன்றி சொல்வதோடு, பிறரும் இந்நூலைப் படித்து பயன் அடையவும் புனிதரின் ஆசீர் பெறவும் வேண்டுகிறோம்.

**நாஞ்சில் பதிப்பகம்**

## உள்ளே . . .


| | |
|---|---|
| அதிதூதர் மிக்கேல் வரலாறு | . 5 |
| பற்பல செபங்கள் | . 10 |
| பேயோட்டும் செபம் I | . 11 |
| பரம்பரையாக சொல்லப்படும் செபம் | . 13 |
| தூய சிலுவையின் ஆயுதத்தால் | . 15 |
| வழிபாடு | . 16 |
| தூய சிலுவையின் ஆயுதத்தால் | . 20 |
| புனிதருக்கு நவநாள் செபம் | . 21 |
| அதிதூதருக்கு புகழ்மாலை | . 22 |
| பலன்மிகு செபம் | . 24 |
| தராசு ஏந்திய மிக்கேல் செபம் | . 25 |
| புனித மிக்கேல் சத்திரு சங்காரமாலை | . 26 |
| தூய மிக்கசேல் தேவதூதர் செபம் | . 33 |
| பேயோட்டும் செபம் சச | . 33 |
| தென்காசி ஆலயம் | . 37 |
| இராஜாவூர் ஆலயம் | . 39 |
| பாடல்கள் | . 40 |


---


Nihil Obstat:

Mgr. S. **BARNABAS**
Vicar General

---

Imprimatur:

† M. AROCKIASAMY
Bishop of Kottar

Nagercoil
28-8-1978

# 1. அதிதூதர் மிக்கேல் வரலாறு

விண்ணுலகில் நவவிலாச வான் தூதர்களின் தலைவர் புனித மிக்கேல். உலகம் படைக்கப்படும் முன்னர் தூதர்களின் விடிவெள்ளி என அழைக்கப்பட்டவன் லூஸிபர். உலகிற்கு மீட்பர் தேவை, மீட்பது தன் மைந்தன் என இறைவன் திருவுளமானார்.

நான் அதிதூதராக இருக்கும்போது மனுவுரு எடுக்கும் மீட்பரை ஆராதிக்க மாட்டேன் என்ற இறுமாப்பு லூஸிபரில் எழுந்தது. அகங்காரம் கொண்டான், ஆணவத்தால் தேவனையே எதிர்த்தான். நல்வழிகாட்ட மிக்கேல் விரைந்தார். அவரின் நல்லுரைகளை உதறித் தள்ளினான் லூஸிபர்.

பரத்தில் பணிவதைவிட நரகில் ஆட்சிபுரிவதே மேல் என்றான்.

இறைவனுக்கு நிகரானவன் யார்?
என வீர முழக்கமிட்டு, போராடி லூஸிபரையும் அவன் சகாக்களையும் எரிநரகில் வீழ்த்தினார் மிக்கேல் அதிதூதர். மிக்கேல் என்பதன் பொருள், இறைவனுக்கு நிகரானவன் யார் என்பதே:.

"வைகறைப் புதல்வனே, விடிவெள்ளியே,
வானினின்று நீ வீழ்ந்த வகை தான் என்னே!"

(இசையாஸ். 14/12)

"உன்னதருக்கு ஒப்பாக என்னை ஆக்கிக்கொள்வேன் என்று நீ உள்ளத்தில் சொல்லிக்கொண்டாய். ஆயிலும் நீ பாதாளம் வரை தாழ்த்தப்பட்டாய். படுகுழியின் ஆழத்தில் வீழ்த்தப்பட்டாய் (இசையாஸ் 14/14-15)

"பின்பு ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் ஒரு பெரிய சங்கிலியையும் தன் கையில் பிடித்துக்கொண்டு, வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன். சாத்தானென்று

சொல்லப்பட்ட ஆதி சர்ப்பமாகிய பறவைநாகத்தை அவர் பிடித்து, ஆயிரம் வருடமளவாக, அவர் கட்டி வைத்து அது ஜனங்களுக்கு மோசம் போகாதபடிக்கு, அதைப் பாதாளத்தில் தள்ளியடைத்து, அதன்மேல் முத்திரையிட்டார்" (காட்சியாகமம் 20/1-3) இங்கு ஆயிரம் வருடங்கள் என்பது அநேக யுகங்களைக் குறிக்கும். இவண் குறிப்பிடப்பட்ட தூதன் தூய மிக்கேல்.

காட்சியாகமம் 12/7-9 வரை உள்ள வசனங்கள் வருமாறு:-

"அன்றியும் வானத்திலே ஒரு பெரிய யுத்தம் உண்டாயிற்று. மிக்கேலும் அவர் தூதர்களும் பறவை நாகத்தோடு யுத்தம் செய்தார்கள். அவர்கள் செயங்கொள்ளவும் இல்லை. வானத்திலே அவர்கள் இருந்த இடம் அது முதல் காணப்படவுமில்லை. அப்படியே ஆதி சர்ப்பமாகிய அந்தப் பெரிய பறவை நாகம் வெளியே தள்ளப்பட்டது. அதற்குப் பேய் என்றும், சாத்தான் என்றும் பெயர். அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதன் தூதர்களும் தள்ளப்பட்டார்கள்".

இதனால்தான் தூய மிக்கேல் அதிதூதரின் சொரூபத்தில், அவர் பாதத்தின் கீழ் பசாசு மிதிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

அதிதூதர் மிக்கேல் என்றாலே பசாசுக்கு நடுக்கம். அவருடன் போரிட்டு வெற்றிகொள்ள அதனால் இயலாது என்று புனித யூதா ததேயு எழுதியுள்ளதாவது:.

அதிதூதராகிய மிக்கேல், மோயீசனுடைய சரீரத்தைக் குறித்துப் பசாசுடனே தர்க்கித்துப் பேசின போது: அவனது தூஷணத்திற்குத் தீர்வை இடத்துணியாமல் ஆண்டவரே உனக்கு ஆக்கியாபிப்பார் என்றார். (யூதா 1/9 இந்நிகழ்ச்சியை விவிலியத்தில் புனித யூதா ததேயு மட்டுமே குறிப்பிடுகின்றார்) எனவே இது யூதரிடையே வழங்கி வந்த பரம்பரைச் செய்தி என நம்பலாம். பசாசு மோயீசன் உடலை எடுத்திருந்தால், ஒருவேளை ஆராதனை செய்ய யூதர்களைத் தூண்டியிருக்கலாம் என்பது வேதபாரகர் கருத்து. பசாசு நரகில் விழத்தாட்டப்பட்டதை காப்பியமாக வடித்துள்ளார் புலவர் மில்டன். இது "இழந்த பரகதி" (Paradise lost) என அழைக்கப்படுகிறது.

அதிதூதர் மிக்கேல் வல்லமை மிக்கவர். ஆயினும் தாழ்ச்சியுடையவர். அவர் சமாதானத்தூதன். இஸ்ராயேல் ஜனத்திற்கு வழிகாட்டியவர். பதிதரின் சம்மட்டி. மரணவேளையில் நம்முடனிருந்து பசாசுக்களை ஓட்டுபவர். உலக முடிவில் எக்காளம், ஊதும் அதிதூதர் அவர் எனக் கருதப்படுகிறது.

"அக்காலத்தில் உன் இனத்தாருக்குக் காவலாக சேனைத் தலைவரான மிக்கேல் எழும்புவார்; மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்ப காலம் வரும்."

யார் யார் பெயர் நூலில் எழுதப்பட்டுள்ளதோ, அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள். இறந்து போய் மண்ணில் உறங்குகிற பலருள் சிலர் முடிவில்லா வாழ்வடைவதற்கும், சிலர் முடிவில்லா இழிவுக்கும், நிந்தைக்கும் ஆளாவதற்கும் எழுந்திருப்பார்கள் (தானியேல் 12/ 1,2) என்ற வேதப்பகுதி உறுதிப்படுத்துகிறது. அவர் திருச்சபையினைக் காக்கும் அதிதூதர், தூயவர்களின் செப காணிக்கைகளை இறைவன் வைப்பார்.

இதனைக் காட்சியாகமம் தெளிவுப்படுத்துகின்றது.

பின்பு வேறொரு தூதன் வந்து பொன் தூபக்கலசத்தை கையில் ஏந்திக்கொண்டு, பலிபீடத்துக்கு முன்பாக நின்றார். அப்போது சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற பொற்பீடத்தின் மேல் சகல தூயவர்களுடைய செபக் காணிக்கையை ஒப்புக்கொடுக்கும்படி மிகுந்த தூபவர்க்கங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டன. ஆகையால் தூயவர்களுடைய செபங்களிலிருந்து கொடுக்கப்பட்ட தூபவர்க்க புகையானது, தூதன் கையிலிருந்து சர்வேசுரனுக்கு முன்பாக எழும்பிற்று. பின்பு தூதன் அந்த தூபக்கலசத்தை எடுத்து, அதை பீடத்தின் நெருப்பினால் நிரப்பி, பூமியில் கொட்டினார். உடனே இடிகளும், முழக்கங்களும், மின்னல்களும், பலத்த பூமி அதிர்ச்சியும் உண்டாயின. (காட்சியாகமம். 8/3-5)

13.ம் சிங்கராயர் பாப்பிறை ஒரு தினம் திருப்பலி நிறைவேற்றி முடிந்தவுடன் திடீரென்று மூர்ச்சையானார். யாவரும் அவர் இறந்தார் என எண்ணினர். வெகு நேரத்திற்குப்பின் அவர் சுயநினைவு பெற்றார். திருச்சபையின் மீது சாத்தானால் வர இருக்கும் தீதுகளை அவர் காட்சியாகக் கண்டு நடுங்கி விட்டார், தூய மிக்கேல் அதிதூதர் விரைந்து வந்து சாத்தானுடன் போர் செய்து, அதனையும் தோழர்களையும் நரகத்தில் தள்ளியதையும் அக்காட்சியில் அவர் கண்டார். உடனே தூய பிதா அவர்மீது ஒரு செபத்தை எழுதி உலகமெங்கும் அது செய்யப்பட வேண்டுமென ஆணையிட்டார்.

திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே அவர் திருச்சபையின் காவற்தூதராகவே போற்றப்பட்டார். ஆயினும் 5.ம் நூற்றாண்டில் தான் அவரது திருநாள் செப்டம்பர் 29.ஆம் நாள் கொண்டாடப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இதிலிருந்தே மைக்கல்மாஸ் விடுமுறை தோன்றியது.

திருநாள் கொண்டாடிட நிகழ்ந்த நிகழ்ச்சி சுவையானது.

கி.பி. 404.ல் தூய மிக்கேல் காட்சி தந்ததால் சிபான்றோ என்ற இடத்தில் உள்ள குகையொன்று சிறப்பு பெற்றது: சிபான்றோ மக்கள் மீது அண்மை நாட்டார் படையெடுத்திட முயற்சிகள் செய்த வண்ணம் இருந்தனர். பக்தியுள்ள ஆயர் தங்களைக் காத்திட அதிதூதர் தூயமிக்கேலிடம் மன்றாட மக்களைக் கேட்டுக் கொண்டார். போருக்கு முந்தின இரவு அதிதூதர் ஆயருக்குக் காட்சியளித்து, அடுத்த நாள் பகைவர்கள் தோற்று ஓடிவிடுவர் என்றார். அடுத்த தினம் யுத்தம் ஆரம்பமானதும் பெரும் புயல் வீசியது. பயங்கர இடியும் மின்னலும் ஏற்பட்டன. மின்னல் அம்பு போல் பாய்ந்து பகைவரைத் தாக்கியது. எதிரிகள் எதிர்க்க இயலாது படைக்களம் விட்டு பயந்து ஓட்டம் பிடித்தனர். புறமுதுகு காட்டி ஓடினர். இவ்வெற்றியின் நினைவாக கெபி ஒரு ஆலயமாக மாற்றி அமைக்கப்பட்டது. பல புதுமைகள் இங்கு நடந்தேறின. திருச்சபையும் அவருக்கு திருநாள் அமைத்தது. ஒவ்வொரு

ஆண்டும் செப்டம்பர் 29.ல் அவர் திருநாள் மிக சிறப்பிக்கப் படுகிறது.

பசாசுகளின் சகல மாய்கையிலிருந்தும் நம்மைக் காப்பவர் தூயமிக்கேல் அதிதூதர். போர் வீரர்களின் பாதுகாவலராகவும் அவர் புகழப்படுகின்றார். உலகம், உடல், அலகை என்பவற்றுடன் நாம் அன்றாடம் நடத்தும் போரில் வெற்றியடைய அவரின் உதவி நமக்குத்தேவை. எனவே அவர் மீது பக்திகொண்டு, அவரை வேண்டுவது சிறந்த பக்தி முயற்சியாகும்.

தமிழகத்தில் எனக்குத் தெரிந்தவரை, கோவை மறைமாவட்ட ஆயரின் தூயமிக்கேல் அதிதூதர் ஆலயமும், தென்காசி தூய மிக்கேல் தேவாலயமும், இராஜாவூர் மிக்கேலார் கோவிலும் புகழ்மிக்கவை. தென்காசி ஆலயத்தைப் பற்றி கர்ண பரம்பரையாக ஒரு வரலாறு சொல்லப்பட்டு வருகிறது. தூய மிக்கேல் அதிதூதரின் திருநாள் பவனியின்போது, நாத்திகர் சிலர் இழுக்கான செயல் பல இழைத்தனர். அன்றிரவே கொள்ளைநோய் ஒன்று ஏற்பட்டு பல பெண்கள் கைம்பெண்களாயினர். அவர்கள், அறுத்த தாலி ஒரு நாழி அளவு இருந்ததாம். இதனைக்கண்ட நாத்திகர் மன்னிப்புக்கோரி ஆத்திகராகினர். உடனே கொள்ளைநோய் நீங்கியது. அது முதல் எல்லா மதத்தினரும் அதிதூததரின் திருநாளில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். தமது ஊருக்கு அவரை பாதுகாவலராகக் கொண்டுள்ளனர். அவரது ஆலயம் இன்றுவரை "சர்வேசுரன் கோவில்" என்று அழைக்கப்படுகிறது.

அதிதூதர் மிக்கேல் வலிமை பொருந்தியவர். திருச்சபைக்குப் பாதுகாவலர், கிறிஸ்தவ நாடுகளுக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பாதுகாவலர். "எல்லா வானதூதர்களையும் நாம் வந்திக்க வேண்டும். எனினும் சிறப்பாக தூயமிக்கேல் அதிதூதரை நாம் நாட வேண்டும். அவர் மகத்துவம் வாய்ந்த பதவி வகிப்பவர், மிக உயர்ந்த அலுவல் பார்க்கிறவர். தோல்வி அடைய முடியாத வல்லமை உள்ளவர். என்பது தூய லாரன்ஸ் ஜஸ்டினியன் கருத்து. இன்றும் யூதர்கள் ஆபத்துக்களிலிருந்து தங்களைக் காத்திட அவரை மன்றாடி வருகின்றனர்.

"இரக்கத்தின் தூதரான" மிக்கேலே. இரக்கத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அவரது முகத்திலிருந்து வரும் ஒளியில் இஸ்ரேயேல் மோட்சத்தை ஆளும்படி இஸ்ராயேலுக்காக மன்றாடும், என்ற மன்றாட்டுடன் பிரயாசித்த திருநாளன்று தங்கள் செபங்களை யூதர்கள் முடிக்கின்றனர். பரத்திலிருக்கும் வான்தூதர்கள் அனைவரிலும் மகிமையிலும், வல்லமையிலும் சிறந்தவர்: அதிதூதர் மிக்கேல் என்பது வேதபாரகர் கருத்து: உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்களின் உதவியாளர் தூயமிக்கேல், அவர்களைத் தேற்றுகிறார். தூய ஆன்மாக்களை பரம் அழைத்துச் செல்கின்றார். மரித்தோருக்கானத் திருப்பலியில் "தேவரீர் முற்காலத்தில் அபிரகாமுக்கும் அவரது சந்ததியாருக்கும் வாக்களித்த பேரின்ப ஒளிக்கு அவர்களை வெற்றிக்கொடி தாங்கும் தூயமிக்கேல் அழைத்துச் செல்வாராக" என வேண்டப்படுகிறது.

நமது துன்ப வேளையில் தவறாது உதவும் நண்பர் தூயமிக்கேல் அதிதூதர். நமக்காகவும் நம் மறைக்காகவும் அவரை அனுதினம் வேண்டிடுவோம்.

# பற்பல செபங்கள்

## பாப்பிறை 13-ம் சிங்கராயர் எழுதிய செபம்

அதிதூதரான புனித மிக்கேலே! எங்கள் போராட்டத்தில் எங்களைக் காத்தருளும். பசாசின் வஞ்சக தந்திரங்களில் எங்களுக்குத் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக் கேட்டு, சர்வேசுரன் பசாசைக் கண்டிப்பாராக. மோட்ச சேனையின் தலைவரே! ஆத்துமங்களைக் கெடுக்க இவ்வுலகில் சுற்றித் திரியும் பசாசையும் மற்ற கெட்ட அரூபிகளையும் தேவ பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. - ஆமென்.

## புண்ணியத்தில் நிலை கொள்ளச் செபம்

(தூய மிக்கேல் சொரூபத்தில் அவர் தராசு ஏந்தியிருப்பதைப் பார்க்கின்றோம்.

பாவ.புண்ணியங்களை நிறுப்பது தான் அது ஒரு தட்டில் நாம் செய்த தீவினைகள்

மறுதட்டில் நாம் செய்த நற்கிரியைகள் எது அதிகம்? இறைவன் முன் தராசின் எந்த தட்டு நமக்கு சாதகமாயுள்ளது...)

அதி தூதரான தூய மிக்கலே! தீய உலகில் வாழும் எங்களை ஆசாபாசப் புயல் கௌவிக் கொள்ளாதவாறு காத்தருளும். பாவத்திற்கு அஞ்சி வாழும் மன வலிமையை எங்களுக்கு தாரும். எங்கள் பாவத்தால் உமது தராசு கீழே தாழாமல் புண்ணியத்தால் மேலெழும்பி, நாங்கள் முடிவில்லா இன்ப வாழ்வடைய வழி காட்டும்படி உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம். எங்கள் மன்றாட்டைத் தயவாய்க் கேட்டு அருள் பாலியும். - ஆமென்.

## பேயோட்டும் செபம் I

ஆற்றல் மிகும் தூய மிக்கேல் அதிதூதரால், நரகில் வீழ்த்தப்பட்ட ஆணவமும், அகங்காரமும் கொண்டு, இறைவனை இகழ்ந்த தீய அரூபிகளே, நீங்கள் எங்களை விட்டு அகலக்கடவீர்கள்.

† திருச்சிலுவை அடையாளத்தால் உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். தூய பிதாவின் சொல்லற்கியலா மகா திருநாமத்தை பணிவுடன் உரைத்து கட்டளையிடுகிறோம். † மகா பரிசுத்த சுதன் இயேசு நாதரின் மகிமை மிகு திருப்பெயரைச் சொன்னதும் வானகணங்கள் அனைத்தும் தெண்டனிடுகின்றன.

அத்திருபெயரால் † கட்டளையிடுகின்றோம். திருச்சபையினை பரிபாலிக்கும் திருத் தூய ஆவியின் பெயரால் உங்கட்கு கட்டளையிடுகின்றோம். இறைவனுக்கு நிகர் யார்? என லூஸிபரிடம் கேட்டு அவனைத் தீய நரகில் விழத்தாட்டிய தூய மிக்கேல் அதிதூதரே? எங்களைத் துன்புறுத்தும் அலகை, பல திக்கும் வெருண்டு ஓடச் செய்வீர். ஈட்டியால் குத்தி வீழ்த்துவீர். விலங்கிடுவீர். எமக்கருள் வழங்கிடுவீர். எங்களது இந்த . . . . . மன்றாட்டுக்குச் செவி சாய்த்தருளும்.

சமாதான தூதரே! வலிமையின் பொலிவே! அருள் மிகும் அமுதே! துயர் நீக்கும் பொழிலே!! பேயோட்டும் நேயனே! எம்மை திக்கு முக்காடச் செய்யும் சாத்தானின் சகல கற்பனைகளில் நின்று எம்மை இன்றும், என்றும், இறுதி வேளையிலும் காத்து முடிவில்லா இறைவனின் நகருக்கு அழைத்துச் சென்று, காணிக்கையாய் எமை அவருக்கு அர்ப்பணிக்க மிகத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம். மகா மகிமையுள்ள அதிதூதரே! எம் மன்றாட்டைக் கேட்டருளும். பொற் தூப வர்க்கத்தின் நறுமணப் புகையினை இறைவன் முன் சாற்றும் தூதரே! நறுமணத் தூப புகையுடன், எம் எளிய வேண்டுதலையும் இறைவன் முன் வைத்து எளிம எந்நாளும் காத்திட உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

## செபம்

தேவதூதர்களின் முதன்மையான தூய மிக்கேல் அதிதூதரே! ஆணவம் மிக்க லூசிபரின் தலையை நசுக்கினீர். அவனையும் அவன் தோழர்களையும் நரகத்தில் வீழ்த்தினீர். திருச்சபையைக் காக்கின்றீர். எனது மரண வேளையில் அவ நம்பிக்கை மூலம் பசாசு என்னை கெடுத்திடாது, அரவணைத்து காக்கின்றீர். இவ்வுலகில் ஒரு வினாடியேனும் பசாசின் மாய்கையில் நான் விழாது காத்து, எனக்கு வேண்டிய ஆன்ம, சரீர நன்மைகளையும் அருளி, என் குடும்பத்தை ஆசீர்வதித்து, விக்கினங்களை விலக்கி முடிவில்லா வாழ்வடைய உதவுவீர் தூயவரே! - ஆமென்.

புனித மிக்கேல் அதிதூதரே / இறைவனின் அணியில் புகழ் பெற்றவரே / தேவ தூதர்களின் தலைவரே / இறைவனுக்கு எதிராக எழும்பிய அலகைகளை / எதிர்த்து போர் புரிந்து / அவர்களது ஆணவத்தை அடக்கி நித்திய நரகத்தில் தள்ளிய வானவர் தலைவரே / இறைவன் சித்தத்திற்கு என்றும் அமைந்து / தாழ்ச்சியில் உயர்ந்து புகழ் பெற்ற அதிதூதரே / மனிதரைப் படுகுழியில் தள்ளிப் பழிவாங்க / கொதித்தெழும் பசாசின் முயற்சிகளைத் தகர்த்தெறிந்து இறைமக்களை வல்லமையுடன் பாதுகாக்கும் காவலரே / இறைமக்களுக்கு எண்ணற்ற நன்மை செய்பவரே / என்னை உமது பாதுகாவலில் வைக்கிறேன். பசாசின் பிடியிலிருந்து / எங்களை விடுவித்தருளும். இறைவனில் நாங்கள் என்றும் நிலைத்திருக்க / எங்களுக்காக மன்றாடும்.

- ஆமென்.

## ✠ பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வரும் செபம்

அர்ச். சந்தியாகப்பரே! தெற்கு திசையிலிருந்து எதிர்க்கும் சத்துரு பேய், பில்லி, சூன்யம், ஏவல் கோஷம், குட்டி, சகல பேய்களையும் உமது ஜெய வாளால் வெட்டி ஜெயித்து பிதாவினால் நரகத்தில் சபிக்கப்பட்ட பிசாசுகளே என் ஆண்டவராகிய ஏசு கிறிஸ்துவினுடைய சிலுவை அடையாளத்தால் அகன்று போகக்கடவீர். யூதர் கோத்திரத்தின் சிங்கமும் தாவீதரசனின் சந்ததியுமான ஏசு கிறிஸ்து ஜெயங்கொண்டார். அவர் அடைக்கல உத்தரியத்தில் மறைத்து நித்திய ஜீவனைத் தந்தருளும் அல்லேலூயா.

அர்ச். பரிசுத்த ஆரோக்கியமாதாவே! வடக்கு திசையிலிருந்து என் மீதில் எதிர்த்துவரும் சத்துரு, பேய், பில்லி, சூன்யம், ஏவல், குட்டி, சகல பூதங்களையெல்லாம் உமது திரு வலது பாதத்தினால் அதன் தலையை நசுக்கி நரக பாதாளத்தில் அனுப்பி பிதாவினால் வரம் பெற்ற என் ஆண்டவனே எங்களுக்கு நேரிடும் எந்த

ஆபத்து, அபாய துன்பம் சஞ்சலத்தில் நின்று உமது திருக்கரத்தேந்திய குழந்தை சேசுநாதரை மன்றாடி எங்களை ஆசி புரிந்தருளும் ஆமென் அல்லேலூயா.

அர்ச். அந்தோனியாரே! கிழக்கு திசையிலிருந்து என் மீதில் எதிர்த்து வரும் சகல சத்துரு பூதபேய்களையும் தூஜஅின் அப்பிலிஷா கைகுஸ்த்தீன் அந்தோனி தூலிபோஸ்கே சுவன்கர்க்கிஸ்தூ ஜீசஸ் கிறைஸ்த் தூலிபோஸ் பாசல் விஜின்மேரீ தூ லூக்காஸ் கைகுஸ் டாக்டாக்டாக் யிதோ என் ஆண்டவருடைய பரிசுத்த சிலுவை சத்துருவாகிய நீங்கள் அகன்று போகக்கடவீர் யூதா கோத்திரத்தின் சிங்கமும் தாவீதின் சந்ததியுமான ஏசு கிறிஸ்து ஜெயங்கொண்டார் அல்லேலூயா.

அர்ச். மிக்காயேல் சம்மனசானவரே! மேற்கு திசையிலிருந்து என் மீதில் எதிர்த்து வரும் சத்துரு, பேய், பில்லி சூன்யம், ஏவல், குட்டி, சகல பூதங்களையும் இதோ என் ஆண்டவருடைய பரிசுத்த சிலுவையை நாட்டினேன். அவருடைய சத்துருக்களாகிய நீங்கள் அகன்று போகக் கடவீர். யூதர் கோத்திரத்தின் சிங்கமும் தாவீதின் சந்ததியுமான ஏசு கிறிஸ்துநாதர் ஜெயங்கொண்டார். அடியேனை அடியாளை மறைத்து வைத்த இவ்வுலகத்தில் நின்று எங்களை இரக்ஷீத்தருளும் அல்லேலூயா.

என் ஆண்டவருடைய பரிசுத்த சிலுவையே எனக்கு நேரிடும் எந்த ஆபத்து அபாய துர்மரணங்களிலே நின்று காப்பாற்றியருளும்.

பிதா, சுதன் ஸ்பிரித் சாந்து

என் ஆண்டவருடைய பரிசுத்த திரு இருதயமே! நாலு மூலை எட்டு திக்கு பதினாறு கோணம் ஆகாயம் பூமி தாழ்வாரங்களே நின்று என்மீது எதிர்த்து வரும் சத்துரு பேய் பில்லி சூன்யம் ஏவல்குட்டி பூத பேய்களையும் நீக்கி உம்முடைய அடைக்கலமென்கிற இருதய நிழலில் வைத்துக் காப்பாற்றி இரட்சித்தருளும். ஆமென் சேசு. அல்லேலூயா.

## ✠ தூய சிலுவையின் ஆயுதத்தால் பசாசின் தந்திரங்களை ஓட்டும் செபம்

யூதாவின் மரபிலும், தாவீதின் குலத்திலும், உற்பவித்த சிங்கத்தினை வென்றதானியேல் இறைவாக்கினரும், இறைவனின் திருமகனும், யூதரின் அரசரும், இயேசு நசரேனுமான திருச்சிலுவை நாதா! சமாதானத்தோடு என்னிடம் வாரும் அரசரே! தேவரீர், எமக்காய் மனுவானீர், யூதர்களின் அரசரே! வார்த்தையானது உடலாகி எம் மீட்பிற்காய் பாடுபட்டவரே! கன்னிமரியாயின் மைந்தனே! உமது தூய அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், துதியர்கள், அதிதூதர்கள் மன்றாட்டுக்களை ஏற்று, எமக்கு நற்கதி அருளி, வெஞ்சினப் பேய்களை வெருண்டோடச் செய்வீர். அதிதூதர் தூயமிக்கேலை எமக்குத் துணையாய் அருள்வீர் . . .

- ஆமென். (ஒரு பர. அரு. பிதா)

தூய மிக்கேல் அதிதூதரே!

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## அதிதூதர் மிக்கேல் எதிரியை எரிப்பார்

(Prayer to St. Michael Archangel)

விண்ணகப் படையின் தளபதியான மகிமை மிகும் தூய மிக்கேல் அதிதூதரே! எங்களைச் சூழும் இருளினின்றும், மாற்றானின் மாயையில் நின்றும் காத்திடுவீர். ஏனெனில் நமக்குள்ள போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், வல்லமைகளோடும், இந்த அந்தகார உலகாதிபதிகளோடும், ஆகாச மண்டலங்களிலுள்ள அக்கிரம அரூபிகளோடும் நாம் போராட வேண்டியதிருக்கிறது (எபேசியர் 6:12). நம் சாயலில் படைக்கப்பட்ட மனிதனை காப்பாற்ற அவர் தம்மை பலியாக்கியதை எண்ணி அவர் பொருட்டு எமை காத்தருளும். சாத்தானை நசுக்கி காலால் மிதித்து எம்மை அழியவொட்டாது அவனை எரி நரகில் அமிழ்ந்திட உதவிடுவீர் . ஆமென்.

## From Prayer Satan & the Rebellious Angels

## வழிபாடு (வேண்டுதல்)

முதல்வர்:

அதிதூதரான தூயமிக்கேலே! இறைவனின் அணியில் புகழ் மிக்கவரே! இறைவனின் தூதர்களின் தலைவா! இறைவனை எதிர்த்த பேய்யினங்களைப் பேரிடி போல முழங்கி எரிநரகில் தள்ளிய எந்தையே! இறைவன் திருவுளத்திற்கு ஏற்ப நடந்து, தாழ்ச்சியால் மாட்சி பெற்ற தூயவா! எம்மைப் பழிவாங்க எண்ணும் கூளிகளை துறத்தி எம்மைக் காத்தருளும். என்றும் எம்மை இறைவன் பிள்ளைகளாக வாழச் செய்தருளும்.

துணைவர்:

தூய மிக்கேல் அதிதூதரே!

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. இறைவனுக்கு ஏவல் புரிந்து அவர் புகழ் பாடும் வானதூதர்களின் அணியின் தலைவரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. இறைவன் சித்தத்திற்கு அமைந்து உயர்வு பெற்றவரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. தாழ்ச்சியின் எடுத்துக்காட்டாக விளங்கிய தூதர் தலைவரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. இறைவனுக்கு நிகர் யார்? என்று முழக்கம் செய்து போர் புரிந்த வீரரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. லூஸிபரையும் அவனது தோழர்களையும் நித்திய நெருப்பில் தள்ளிய வீரரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. விசுவாசிகளின் உறுதுணையான வானதூதரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. பசாசுக்கள் மனிதர் மேல் செய்யும் சூழ்ச்சிகளை தகர்த்தெறியும் வல்லமை மிக்க வீரரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு. துன்பங்களினின்று மக்களை கைதூக்கும் புனித தூதரே!

து. எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**செபிப்போமாக:** அதிதூதரின் பாதுகாவலில் குழுமியிருக்கும் நாம், அவரது வேண்டுதலினால் நமக்கு வேண்டிய நலன்களைத் தாராளமாகப் பெற்றுக் கொள்ள அன்புக்கடவுளை மன்றாடுவாராக.

மு. இறைவன் தன் சுதனை அறிவித்தபோது, மனிதனாகப் பிறந்த அவருக்கு சிரம் தாழ்த்திப் பணிந்து வணங்கிய புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் நாங்கள் இறைமகன் இயேசுவை விசுவசித்து, எங்கள் வாழ்க்கையில் அவரை ஏற்று நல்வாழ்வு வாழ எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று - ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. பசாசின் சோதனைகளால் துன்பப்படும் நாங்கள் அவைகளை முறியடித்து, வெற்றி முரசு கொட்டிய புனித மிக்கேல் அதிதூதரின்ஆணையால், ஆறுதலும் தைரியமும் அடைந்து, பசாசினால் எங்களுக்கு வரும் இன்னல்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று -

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. பசாசின் அடிமையாகி, அதற்கு ஏவல் புரியும் மனிதர்கள் பசாசுகளை நடுநடுங்கச் செய்யும், புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால், அந்த அடிமைத்தனத்திலிருந்து விலகி இறைவன் ஒருவருக்கே சேவை செய்ய வேண்டுமென்று,

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. மனித குலத்தின் பகைவனாகிய பசாசின் வல்லமையினால் பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் மனிதர்கள் இறைவனது, உன்னத வல்லமையை நிலைநாட்டப் போர்புரிந்து, வெற்றி கண்ட புனித மிக்கேலே! அதிதூதரின் வல்லமையை உணர்ந்து பிறர் நலம் பேணி நன்மை செய்து வாழ அருள் புரிய வேண்டுமென்று ஆண்டவரே . . .

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. உடல் நோயாலும், மனநோயாலும் அவதிப்படும் உமது மக்களுக்கு, வல்லமை படைத்த வானவர் படைத்தலைவர் அதிதூதர் புனித மிக்கேலின் வேண்டுதலால், உள்ளும், புறமும் முழு நலம் அளித்து ஆசீர் அருள வேண்டுமென்று

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. பசாசின் ஏவுதலால் சித்தம் சிதறி நிற்கும் உமது மக்கள் அதிதூதர் புனித மிக்கேலின் வேண்டுதலால் சித்தம் தெளிந்து, நல்லறிவு பெற்று, உண்மையைக் கடைப்பிடித்து வாழ அருள்புரிய வேண்டுமென்று

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. அதிதூதர் புனித மிக்கேலின் வழியாக நாங்கள் உம்மிடம் கேட்கும் எங்கள் மன்றாட்டுக்களுக்கு இரக்கமுடன் செவிசாய்த்து, எங்கள் ஆத்துமத்துக்கும், சரீரத்துக்கும் தேவையானவற்றைத் தந்தருள வேண்டுமென்று

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு. சிலுவையில் தொங்கிய உம் திருச்சுதனைப் பார்த்து எங்கள் துன்பங்களை நல்மனதுடன் ஏற்று, அதனால் பலன் பெற்று இன்பமுடன் வாழ அருள்புரிய வேண்டுமென்று,

து. ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

(தங்களின் தேவைகளுக்கு உறுதியோடு வேண்டிக்கொள்ளவும்)

மு. எல்லாம் வல்ல இறைவா! மனுக்குல மீட்பரே! இறைவனுக்கு நிகர் யார்? என்ற போர்க்குரலெழுப்பி, உமது மேலான மகிமைக்காய்ப் போர்புரிந்து, பசாசின் கொட்டத்தை அடக்கிய அதிதூதர் புனித மிக்கேலின் மன்றாட்டினால் எங்களுக்கு வரும் துன்பங்களிலிருந்து எங்களை விடுவித்து, எங்களது உள்ளத்திலும் உடலிலுமுள்ள நோய்களைப் போக்கி நாங்கள் உம்மையே என்றும் வாழ்த்தி உமதன்பில் நிலைத்திருக்கச் செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாய் உம்மைத் தாழ்மையாய் மன்றாடுகிறோம்.

து. ஆமென்.

**செபிப்போமாக:**

எல்லாம் வல்ல இறைவன் நமக்கருளிய ஆன்ம சரீர நன்மைகளுக்காகத் தாழ்மையுடன் மன்றாடுவோம்.

மு. படைப்புகளின் சிகரமாக மனிதனைப் படைத்து அழியாத ஆன்மாவை அவனுக்களித்து, உமது வாழ்வில் அவன் பங்கு கொள்ள அருள் செய்ததற்காக,

து. ஆண்டவரே! நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

மு. பாவத்தினால் உழலும் மனிதனை மீட்க மனு உருவெடுத்து மனிதனை உம்முடன் இணைத்ததற்காக,

து. ஆண்டவரே . . .

மு. சிலுவையில் பலியாகி எங்களை மீட்டு உம் மக்களாக்கியதற்காக,

து. ஆண்டவரே . . .

மு. பசாசின் சோதனைகளிலும் சூழ்ச்சிகளிலுமிருந்து எங்களை விடுவித்துக் காத்ததற்காக,

து. ஆண்டவரே . . .

மு. ஆன்ம சரீர ஆபத்துக்களிலிருந்து உமது பரிவிரக்கத்தால் எங்களைக் காப்பாற்றியதற்காக,

து. ஆண்டவரே . . .

மு. உடல் நோயாலும், மனநோயாலும் வருந்திய எங்களுக்கு ஆறுதல் அளித்து குணப்படுத்தியதற்காக,

து. ஆண்டவரே . . .

மு. எங்கள் துன்பங்களையும், வேதனைகளையும் உமக்காக அன்புடன் ஏற்றுக்கொள்ள பொறுமையும் தைரியமும் அளித்ததற்காக

து. ஆண்டவரே . . .

மு. நாங்கள் உமது அன்பையும் ஆதரவையும் உணர அருள் புரிந்ததற்காக,

து. ஆண்டவரே . . .

மு. அதிதூதர் புனித மிக்கேலின் வேண்டுதலால் நாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக,

து. ஆண்டவரே . . .

(ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற தனி நன்மைகளை, நன்றியுடன் நினைவுகூறவும்)

மு. எல்லாம் வல்ல இறைவா! அனைத்தையும் அன்பினால் ஆள்பவரே! அதிதூதர் புனித மிக்கேல் வேண்டுதலினால் நாங்கள் பெற்றுக்கொண்ட சகல நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். நாங்கள் என்றுமே உம்மைப் போற்றி உமக்குகந்த மக்களாக வாழக்கிருபை செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து வழியாக . உம்மை . . .

ஆண்டவரே! உடல் நோயால் வருந்தும் உமது ஊழியரைப் பாரும். நீர் படைத்த ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். நாங்கள் துன்பங்களிலிருந்து தூய்மை அடைந்து, உமது இரக்கத்தினால் விரைவில் குணம் அடையும்படி அருள்புரிவீராக! எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் - ஆமென்.

ஆண்டராகிய இயேசுக்கிறிஸ்து நம்மைப் பாதுகாக்க நம் நடுவிலும், நம்மைக் காப்பாற்ற நமக்குள்ளும், நமக்கு வழிகாட்ட நமக்கு முன்னும், நமக்குப் பாதுகாவலாயிருக்க நமக்குப் பின்னும், நம்மை ஆசீர்வதிக்க நம் மேலும் இருக்க அதிதூதர் புனித மிக்கேல் வழியாக வேண்டுகிறோம். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே - ஆமென்.

# தூய சிலுவையின் ஆயுதத்தால் பசாசின் தந்திரங்களை செயிக்கிற செபம்

யூதா சந்ததியிலும், தாவீதின் கோத்திரத்திலும் பிறந்து, சிங்கத்தை செயித்த தானியேல் தீர்க்கத்தரிசியும், ஆண்டவருடைய சுதனும், யூதருக்கு அரசருமாகிய இயேசு நசரேன் எனும் திருப்பெயர் கொண்ட திருச்சிலுவை இதோ ✠ சத்துராதிகளுடைய கூட்டங்களே நீங்கள் பின்னிட்டு ஓடிப்போங்கள். ஆண்டவரே, ஆசீர்வதித்து என்னைக் காப்பாற்றி, உமது தரிசனத்தை எனக்குக்

காட்டும், என் பேரில் இரங்கி, உமது திருமுகத்தை எனது பேரில்



திருப்பி, எனக்கு சமாதானத்தை கட்டளையிடும். கிறிஸ்து நாதராகிய அரசே! சமாதானத்தோடு என்னிடம் வாரும். தேவரீர் தேவனாயிருந்து மனிதனானீர். யூதரின் அரசராகிய இயேசுவே, வார்த்தையானவரே, மாம்சமாகிய எங்களோடு வாசமாயிருந்தீர், உமது அளவற்ற இரக்கத்தினாலேயும், உமது தயாளம் பொருந்திய கிருபையினாலேயும், தூய கன்னிமரியினிடத்தில் நின்று பிறந்தவரே! முத்திப் பேறுபெற்ற உமது தாயாருடையவும், சகல வான் தூதர்களுடையவும் தலைமை அப்போஸ்தலர் தூய இராயப்பருடையவும், அருளப்பர், மத்தேயு, மாற்கு, லூக்கா, சின்னப்பருடையவும் மன்றாட்டுக்களை ஏற்று எமக்கு அருள்புரியும். பசாசின் தந்திர வலையின் நின்று காத்திட புனித மிக்கேலை எமக்கு உதவியாய் அனுப்பியருளும். முடிவில் ஒருநாள் உம் திருவடிகளை பரத்தில் பணிந்திட எமக்கு அருள்புரியும்.

பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, - ஆமென்.

## புனிதருக்கு நவநாள் செபம்



வானுலகச் சேனைத்தளங்களின் அதிபதியே! சதா ஜீவ அரூபிகளில் மகிமைப் பிரதாபம் நிறைந்த சம்மனசானவரே! அவர்களினும் உத்தமமானவரே! உன்னத கடவுளின் மந்திராலோசனை நிர்ணயப் பெட்டகமே! தேவ சிம்மாசனத்துக்கருகே நிற்கப் பேறுபெற்ற பிரபுவே! தேவகட்டளைப்படி பரலோக வாசலைத் திறக்கவும் பூட்டவும் அதிகாரம் உள்ள வானவனே! தேவநீதி

சிம்மாசனத்தண்டையில் எங்கள் ஆத்துமாக்களைச் சேர்ப்பிக்கும் தூதாதி தூதனே! மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய தீவிரித்து ஒடிவரும் உபகாரியே! மரித்தவர்களின் ஆத்துமங்களை அழைத்து கொண்டுபோய் திவ்விய கர்த்தரின் சந்நிதியில் சேர்க்கும் காவலனே! பலவீனனும் நிர்ப்பாக்கியனுமாகிய அடியோர்களைக் கிருபாகடாட்சமாய்ப் பார்த்து எங்கள் சீவிய காலம் முற்றிலும் விசேஷமாய் எங்கள் மரண தருவாயிலும் எங்களுக்கு உமது தயை நேச உதவி புரிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

# அதிதூதருக்கு புகழ்மாலை

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்

1. சம்மனசுக்களுடைய இராக்கினியாம் புனித மரியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
2. புனித மிக்கேலே *
3. இறைவனின் ஞானத்தாலே நிறைந்திருக்கிறவரான
புனித மிக்கேலே . . .
4. தாழ்ச்சியின் கண்ணாடியான புனித மிக்கேலே . . .
5. கீழ்ப்படிதலை ஏவுகிறவரான புனித மிக்கேலே . . .
6. தேவகுமாரனை உத்தம மேரையாய் ஆராதிக்கிறவரான
புனித மிக்கேலே . . .
7. மகிமையாலும், பிரதாபத்தாலும் சூழப்பட்டவரான
புனித மிக்கேலே . . .
8. ஆண்டவருடைய வலிமை மிகும் படைக்கு பலம் மிகும் படைத்தளபதியான புனித மிக்கேலே . . .
9. தூய தமத்திரித்துவ விருதை ஏந்திய புனித மிக்கேலே . . .

* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

10. பரத்தின் காவலரான புனித மிக்கேலே . . .
11. சமாதானத்தின் தூதரான புனித மிக்கேலே . . .
12. இஸ்ராயேலின் மக்களுக்கு வழிகாட்டியும் தேற்றரவுமாகிய புனித மிக்கேலே . . .
13. யுத்த சபையின் கொத்தளமான புனித மிக்கேலே . . .
14. ஒட்டலோக சபையின் மகிமையும் மகிழ்வுமான புனித மிக்கேலே . . .
15. தூதர்களின் ஒளி மிகுந்த தலைவராம் ம் மிக்கேலே . . .
16. விசுவாசிகளின் கோட்டையாம் புனித மிக்கேலே . . .
17. சிலுவைக் கொடியின் கீழ் போர் செய்வோரின் உறுதியான புனித மிக்கேலே . . .
18. பரஸ்பர நட்பின் பந்தனமான புனித மிக்கேலே . . .
19. மரண அவஸ்தைப்படும் ஆன்மாக்களின் நம்பிக்கையாம் புனித மிக்கேலே . . .
20. பதிதர்களின் எதிராம் புனித மிக்கேலே . . .
21. நியாயத்தீர்ப்பை அறிவிப்பவரான புனித மிக்கேலே * . . .
22. சகல ஆபத்துக்களிலும் உதவி செய்கிறவரான புனித மிக்கேலே . . .
23. ஆதிமுதல் தாழ்ச்சியால் இறைவனின் ஆதீனத்தைக் காப்பாற்றும் புனித மிக்கேலே . . .
24. தூய ஆவியின் சாட்சியால் பெரியவரென்றும், வல்லமையுள்ளவரென்றும் உறுதிப்படுத்தப்பட்ட புனித மிக்கேலே . . .
25. உமது மன்றாட்டால் எம்மை பரத்தில் சேர்க்கும் புனித மிக்கேலே . . .
26. ஆன்ம ஈடேற்றத்தை விசாரிக்க இறைவனால் நியமிக்கப்பட்ட புனித மிக்கேலே . . .
27. வேதாகமத்தில் புகழும் பெரும் தலைவர்களில் ஒருவரான புனித மிக்கேலே . ..
28. இறைவனின் மக்களுக்கு ஆதரவான புனித மிக்கேலே . . .
29. எங்கள் பாதுகாவலரான புனித மிக்கேலே . . .
30. எங்கள் ஆதரவாளரான புனித மிக்கேலே . . .

* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய இயேசுவே,

. எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய இயேசுவே,

. எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய இயேசுவே,

. எங்களை தயைசெய்து இரட்சியும் சுவாமி.

**செபிப்போமாக:**

வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் உரிய பணிகளை ஆச்சரியமான முறையில் நடத்தி வருகின்ற நித்திய பிதாவே! பரத்தில் உமக்கு இடைவிடாமல் பணிவிடை செய்கின்றவர்களால் இப்பூவுலகில் எம் ஜீவியத்தைக் காப்பாற்றும்படி தயை செய்தருளும் சுவாமி. இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். - ஆமென்.

## பலன் மிகு செபம்

வானுலக சேனைத் தளங்களின் அதிபதியே! சதா ஜீவ அரூபிகளில் மகிமைப் பிரதாபம் நிறைந்த அதிதூதரே! உன்னத கடவுளின் மந்திராலோசனை நிர்ணயப் பெட்டகமே! தேவ சிம்மாசனத்தண்டையில் நின்றிடும் பேற்றினைப் பெற்ற பிரபுவே, தேவகட்டளைபடியே பரலோக வாசலைத் திறக்கவும் பூட்டவும் அதிகாரமுடைய வானவனே, தேவநீதி சிம்மாசனத்தில் எங்கள் ஆன்மாக்களைச் சேர்ப்பிக்கும் தூதரே! மரண அவஸ்தையிலிருப்போருக்கு உதவிசெய்ய விரைந்து வரும் உபகாரியே! மரித்தவர்களின் ஆத்துமங்களை அழைத்துக் கொண்டு போய், திவ்விய கர்த்தரின் சந்நிதியில் சேர்க்கும் காவலனே! பலவீனனும் நிர்ப்பாக்கியனுமாகிய அடியேனைக் கருணையுடன்

பார்த்து, என் ஜீவியகாலம் முழுவதும் விசேஷமாய் என் மரணவேளையில் எனக்கு உதவிட வேண்டுமென்று உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறேன்.

**செபிப்போமாக:**

அதிதூதரான புனித மிக்கேலே! பயங்கரமான தீர்வை நாளில் நாங்கள்மோசம் போகாதபடிக்கு எங்கள் ஞான யுத்தத்தில் எங்களைத் தற்காத்தருளும். - ஆமென்.

# தராசு ஏந்திய அதிதூதரான மிக்கேலுக்கு செபம்

நீதித்தராசை ஏந்தி நிற்கும் எழில்மிகு அதிதூதரான மிக்கேலே! உலகம், உடல், அலகையுடன் போர் செய்யும் வலுவை எமக்களித்தருளும். பசாசின் எல்லாவித மாயைகளில் நின்று எம்மைக் காத்தருளும், இறைவனுக்கு நிகரானவன் யார்? என ஆர்ப்பரித்த பசாசுக் கூட்டங்களை எரிநரகில் வீழ்த்தியவரே, தீர்வை நாளில் எம் புண்ணியங்களினால் தராசின் தட்டு மேலெழும்பச் செய்தருளும். பாவத்தால் அத்தராசின் தட்டு கீழ்நோக்கிப் போகாது இருந்திட வேண்டிடும். எங்களுக்கு வேண்டிய . . . (வேண்டுதலை உறுதியாக கேட்கவும்) இறைவனிடமிருந்து பெற்றுத்தாரும். இறுதியாய் இறைவனை முகமுகமாய் உம்முடன் பரத்தில் தரிசித்து பேரின்பமடைய செய்யும். - ஆமென். (1 பர. அருள். திரி.)

அதிதூதர் புனித மிக்கேலுக்கு!

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

# புனித மிக்கேல் சங்காரமாலை

## காப்பு

மூவா முதல்வா! முக்தியின் மகிவா
தேவா! தூயவா அமரர் கோவே
காவாய்! கனிவாய் கருணை முகிலே
பாவால் பாடிட வரமருள் எந்தாய்

நவவிலாச சபை தலைவராம் - புனித மிக்கேல்
தவ நிறை மேலோர் போற்றும் உயர்திரு நெறியாளர்
குவலயத்தோரின் நண்பன் தன்னொளியாளனாமே
உவமையிலாதவர் - பதங்களில் இந்நூலை வைத்து ஆசீர்
வேண்டுதுமே

1. தாரகை அம்புலியும் - செஞ்சுடர் வானமதும்
தரணியுமதும் தந்த - தூய இறைவனாகும்
பரதூதர் கணங்களைப் படைத்தனர் பணிந்திட
நரர் தமைப் படைத்தனர் - தன் தாழ் தொழுதிட

2. இறைசாயலிலே ஆன - இறைமக்கள் மேல் சினந்து
மறைந்தவர் மடியவே - மாயவலை விரித்தது
குறை எதுமிலா - ஆதி பிதாக்களையே
கறைமிகும் மாந்தராக்கி - களித்தது கூளியுமே

3. எரிதீயில் - வீழ்ந்த தீயலகையின் வினைநீக்க
புரியினும் தவம்பல - அருளின்றி ஆவதுண்டோ
விரிகரம் தன்னிலெமைத் தாங்கினால் நீங்கும் துயர்
அரிமா போல் ஆர்த்து வர - வேண்டுகின்றோம்
விண் தூதரே!

4. சிலுவை யடையாளமாதலால் சினந்த பேய்கள்
வலுகட்டாயமாக ஒட்டுவீர் - மிக்கேலாரே!
கொலு இருந்தாலுமவர் - வலுவினைப் போக்கியே நீர்
பலுகிடும் தீயமாசு - தன்னில் நின்றே காப்பீர்.

5. விடிவெள்ளி என்ற லூஸி - தூதனும் செருக்குற்றான்
கொடிய தூஷணை பல மடியின்றி உரைத்திட்டான்
இடியென ஒலித்ததும் - வீர முழக்கமாமே
அடி மேலடியடித்து - அடைத்தீர் நரகதனில்

6. உம்பர் கோன் உம்மை எந்தன் நண்பராய் ஈந்ததினால்
வம்புகள் பல செய்யும் - குணுங்குகள் தொல்லை நின்று
எம்பிரான் அருள் தன்னால் - எம்மையே காக்க வல்லீர்
உம்மையாம் பணிகின்றோம் - துரத்திடும் பேய்களையே

7. மாவினால் உரு சமைத்து - மந்திரம் பல இசைத்து
தீவினை செய்து எம்மை - வீழ்த்திட எண்ணமுற்றோர்
மேவினார் மாற்றானுடன் - படைப்பு பல அளித்தார்
ஈவின்றி பாய்ந்து வரும் - வஞ்சினப் பேயதுவின்

8. ஆணவ ஆங்காரமும் - பஞ்சாய்ப் பறந்திடவே
வாணாள் முழுதும் எம்முன் - வாலினை ஆட்டிடாது
வீணான சதிகளை வீசி எறிந்திடாது
விண்ணகத் தூதுவரே - விரைந்தெழுந்தருள்வீரே

9. பில்லி சூனியமும் - ஏவலும் சீட்டுகளும்
பொல்லாக்கைவளமும் - எறிந்திட எழுவீரே
தொல்லைப் பிணிகளெமை - வெல்லாது நீக்கி விடும்
சொல்லொணா இன்னல்கள் - அல்லல்கள் யாவும் போக்கும்

10. தந்தை போலெமக் குதவும் - தற்பரன் அதிதூதர்
மைந்தர் யாம் அழுதிட - மனம் இசையீர்அல்லவோ
நிந்தைகள் எதுவரினும் - உந்தன் அருள் உளதேல்
சிந்தைகள் மகிழுயவை - சீக்கிரம் மாறிடுமே.

11. வெட்டியே விலங்கினை - அட்டியில் படைத்தனர்
துஷ்டப் பேயழைத்து - நட்டம் பல இழைத்தார்
பெட்டியில் பாம்பினைப்போடு - இட்டிடும் கூளிதனை
மட்டிலாக் கருணையால் - வாட்டும் இடர் நீக்கும்

12. காளி, காட்டேரி, சூளி - கருப்பண்ணன் சங்கிலியும்
போளியுடன் அடிசில் - கேட்டிடும் அங்கண்ணனும்
தாளிசப் பொரியல் - வேண்டும் மாடன், தேவர்களும்
கேளிக்கை செய்திடாது - ஒழித்திடும் மிக்கேலாரே

13. காமுகரைக் கடவுள் - ஆக்கியதே அலகை
கார்முகிலொரு கடவுள் - சுருடனும் கடவுளாமே
காளையுமோர் கடவுள் - கரியதும் கடவுளாமே
காத்திட இவர் உம்மை - தவறாது வேண்டுமென்று

14. சாத்திரங்களை அமைத்து - சகுனம் நல்லதென்று
யாத்திர புராணங்களே - மெய்வேதம் என்றதுமே
ஆத்திரமுற்ற சாத்தான் - ஆண்டவர் மீது கொண்ட
பக்தியை நீக்கிட இத்தந்திரம் கொண்டதுவே

15. பல்லி அடித்தலுக்கு பலன் காண்பார் பலருண்டு
எல்லாம் போயிற்றென்று - ஆந்தையழுதால் சோர்வார்
நல்ல சகுனம் காக்கை - கழுதை கத்தினால் என்று
சொல்லிட வைக்கும் பேயை - எள்ளியே தள்ளிடுவீர்

16. பல்லிளிக்கும் பல்லவி பாடும் - பிளிறும், அலறும்,
பிணக்குகள் செய்யும்
கல்லெறியும் சலசலக்கும், ஊளையிடும் ஊமையுமாகும்
வில்லைப் போலுடலை - வளைத்தே உறுமும்
பொல்லாப் பேய்கள் தனின் - பல்லை உடைத்தெறிவீர்

17. சாதி நீதி பேசும் - திதிகூறும் துதிபாடும்
விதியென்றும், சதியென்றும் விவரமாய் எடுத்தோதும்
மதிவாணர் மனதையும் நொடிதனில் மாற்றிவிடும்
கதியிலா பேயதனை - மிதியென மிதித்திடும் மிக்கேலாரே

18. எட்டுத் திசையுடனே - ஈரெட்டு முக்கும்
கொட்டி முழக்கம் - பாழ் கெட்ட குறள்களை
எட்டிப் பாராது - மாய - வெட்டியே வீழ்த்திடுவீர்
மட்டிலா புகழ்மிகு எழில் - நிறை தூதா வாரும்

19. சீதேவி! மூதேவி! பூதேவி! நாதேவி!
சரம்பல தாங்கி நிற்கும் . நீலியும் மோகினியும்
சிக்கலில் சிக்க வைக்கும் . கொள்ளிவாய் குணங்களும்
சீக்கிரம் பயந்தோட . தூயவா வருவீர்

20. சுடலைப் பிணமதை விரும்பிடும் பைசாசமும்
கடலைப்பொரி சுண்டல் . வேண்டிடும் அணங்கதுவும்
படலை படலையாக பழம் கேட்கும் அரக்கனும்
திடமிழந் தெழுந்தோட . படைநாதா வந்திடுவாய்

21. வேளைக்கோர் வேஷமிட்டு . அந்தியிலும் சந்தியிலும்
ஆளைக்கெடுத்திட மரத்திலும் . மலையிலும்
பாளைப் பனையதிலும் கோர உருவில் தோன்றி
மூளைக்கோளாறு தரும் . கணங்களை பிணைப்பீரே

22. முக்கண்ணன் . முழுக்கண்ணன் பிடாறனாயிரம் கண்ணன்
பக்கத்தில் பலகையுள்ள நையாண்டி தேவர்களும்
திக்கு முக்காடிடவே . திகிலுடன் ஓடிடவே
பக்தர்களின் பரிபாலா . அக்களிப்பின் அருளான
அருள் புரிவீர்

23. கடகடவென சாத்தான் வெருண்டோட
படபடவென அவன் மாய்கைகள் வீழ
நடநடவென திடமுடன் நவின்று
சடசடவென நரகில் வீழ்த்துவார் மிக்கேலாரே

24. கோழிக்கறி சமைத்து . முட்டையும் மதுவும் வார்த்து
நாழிநெல்லும் . பூக்களும் சேர்த்து நயமுடன் கூடி
வாழிய பிசாசென சாந்தி . போற்றி ஆட்டமாடி சங்கூதி
வீழிய இவன் என . விரைந்து செல்ல ஓலம் விட்டு

25. கள்ளும் கொள்ளும் புள்ளும் எள்ளும்
தெள்ளிய அமுதும் . வள்ளிக்கிழங்கும் வகையாய்ச் சேர்த்து
அள்ளிடு துள்ளிடு எள்ளிடு தள்ளிடு என்றிடும்
வள்ளலார் வினைகளை . கிள்ளி எறிவீர் தூய தூதரே

26. கருவாலும் உருவாலும் எருவாலும் புருவாலும்
அருளில்லாக் கயவர் செய்திடும் ஏவலை
கருணை முகிலாம் அருள்நெறி அண்ணலாம்
திருப்பரன் தூதரே! எரித்தெமை காப்பீர் - பரிவுடனே நீர்

27. ஒன்று இரண்டு எட்டு மூன்று எனப்பல எண்களை
இன்னல் ஈந்திடும் . மந்திரமோதி மனமிகப் பொலிந்து
அன்பிலா நண்பர்கள் செய்திடும் ஏவலை
இன்றே எரிந்திட - வருவீர் தூயரே! வந்தெமைக் காரும்

28. ஒன்றேயாயினும் - பலபலவாயினும் ஒருக்கணித்துஎமில்
நுழையுமாயின்
துன்பம் பலபல விளையும் - ஆடச்செய்யும் . பாடச்செய்யும்
பன்மொழி தூஷணங் கக்கச் செய்யும் இன்மொழி யாவும்
பறந்திடச் செய்து
புன்னகை வாயில் நுரையை எழுப்பி பீதியூட்டும்
பேய்களை ஒட்டும்

29. பாதத்தடியின் மண்தனையெடுத்து போதாதெனத்
தலைமுடியும் சேர்த்து
தீதரஸவாளர் வெஞ்சினங் கொண்டு - பசாசுதனை
பக்கத்திலாக்கி
மாதவன் மைந்தரை - ஒழிந்திட செய்திடும்
வாதைகளனைத்தும் - வாளால் மாய்ப்பீர்
- வான் தூதர் தலைவர்

30. முப்பத்து முக்கோடி தேவரை - ஈட்டியால் குத்தி எரிப்பீர்
கொற்றவா நீரும்
தப்பாது பேய்கணங்களை எரித்திடும் - தப்பிட அவர்
சூதினை எரித்திடும்
எப்போதோ நாட்டிய ஆணிகள்! - எரிக மண்ணில் புதைத்த
நறுக்குகள் எரிக
ஒப்பிலா இறைவன் - இணையிலா தூதுவா - துகள்தனைத்
துடைத்து நலமெலாம் அருளும்.

31. மூச்சு ஐயோ! எம் பெருமூச்சு என் செய்வோம்,
பேச்சு எதற்கு - பேதையர் எமக்கு - வாட்டுதே வாதைகள்
தீச்சுடர் போலெம் உளமெரிகின்றதே - உளமெரிகின்றதே
பாய்ச்சி ஈட்டியை வாதைகள் மீதே மீட்பீரெம்மை மிக்கேலாரே.

*சரணம்*

32. அலகையைக் காலால் மிதித்தவரே சரணம்
உலகைக் காத்திடும் உம்பரே சரணம்
பலவகைப் பகைவரின் பயம் நீர் சரணம்
நலம் பல அருளிடும் - நாயகா சரணம்

33. இன்றும் என்றும் புகலிடமாவாய்
அன்றி எமக்குத் துணைவேறுயாரோ?
நன்றியென்றும் உமக்களித்திடவே
என்றும் எம்முடன் இருந்தெமைக் காப்பீர்

## முடிவுத் தொடா நிலை

34. மூவாமுதல்வீன் பதம் பணிகின்றோம்
சீவ நாளெல்லாம் மறவோம் அவரை
தேவ குமாரன் அடி பணிகின்றோம்
ஆவலாய் அவரை ஏத்துகின்றோம்.

35. தூய ஆவியாம் இறைவனைப் போற்றி
நேய அவரருள் வேண்டுகின்றோம்
தாயார் தேவ அன்னை அமலி
தீய பேய்தன் தலையை மிதித்தாள்

36. அன்னையவளின் நாமம் போற்றுதும்
சின்னவானவர் தூயவர் அம்பரர்
என்றும் உதவிடும் மிக்கேல் தூதுவர்
தன்னைப் பணிந்து வாழ்த்துதல் கூறி

37. சிரம் பணிகின்றோம் வரம் வேண்டி
பரமிகுந் தெமக்கு - வரம்பலப் பொழிவீர்
உரமுடன் பாரில் வாழ அருள்வீர்
நரரெம் பகைவன் பேயினை ஓட்டி

*வாழச் செய்வீர்! வாழச் செய்வீர்!*

(போற்றி! எனும்போது மலரினைத் தூவலாம்)

| | | |
|---|---|---|
| 38. தமதிருத்துவம் | போற்றி! | போற்றி! |
| திருச்சிலுவை | போற்றி! | போற்றி! |
| தேவ அன்னை | போற்றி! | போற்றி! |
| தூய ஸ்நாபகர் | போற்றி! | போற்றி! |
| சகல அப்போஸ்தலர் | போற்றி! | போற்றி! |
| அனைத்து வேதசாட்சிகள் | போற்றி! | போற்றி! |
| தூயவர் யாவரும் | போற்றி! | போற்றி! |
| தூதர் கபிரியேல் | போற்றி! | போற்றி! |
| தூதர் இரபேல் | போற்றி! | போற்றி! |
| அதிதூதர் மிக்கேல் | போற்றி! | போற்றி! |

*முற்றுப்பா*

39. பக்திச் சுவாலகர் பத்திராசனருடன்
ஞானாதிக்கர் - நாத கிருத்தியர்
சத்துவர் - பிலவத்தருமிணைந்து
பிராதமீகர் - தூதாதி தூதர்
எனும் நவகணங்கள் இடையறா திறைய
பரிசுத்தர் என பன்முறைப்பாடி
வாழ்ந்திடுங்காலை - நறுமணத்தூபம்
பசும்பொன் கலசத்தில் எழும்பிடும் வேளை
வாழ்வெனும் நிழலில் வாழும் எமக்காய்
தாழ்மை நிறைமிகு மிக்கேல் தூதரே!
வீழ்ந்து பணிந்து வேண்டிடுவீரே
நலமும் அருளும் பொருளும் தருவீர்
பலமும் நலமும் இல்லமும் ஈவீர்
தலக்கொடியாம் எம் சேயரைக் காப்பீர்
மலர்தலை உலகில் - எமை மறவாதீர்
எனயாம் பணிந்து வேண்டுகின்றோம்
வேண்டுதல் ஏற்பீர்! அபயம் அருள்வீர்
ஐயனே நாளும்! ஐயனே என்றும்!

# புனித மிக்கேல் தேவதூதருக்குச் செபம்

தேவதூதர்களுக்கு முதன்மையான மிக்கேல் என்கிற பெரிய தூதரே! நீர் கர்வமாய் எழும்பின சுக்கிரேந்திரன் என்கிற தலைமையான பசாசோடே போர் பொருந்திச் செயங்கொண்டு அதையும் அதன் துணையாளிகளையுங்கூட நரக பாதாளத்திலே தள்ளிக் கிறிஸ்து தேவசபைக்கு அடைக்கலமாயிருந்து, இவ்வுலகத்தை விட்டுப் பிரிகின்ற ஆத்துமங்களுக்குச் சகாயம் பண்ண முன்னிற்க குறியாயிருக்கிறீரே! என்னுடைய மரணத்தருவாயிலே முன்வந்து என் மனதைக் கலைக்கின்ற பசாசுக்களையும் அவைகளின் சற்பனைகளையுந் தள்ளி என் ஆத்துமத்தைத் தற்காத்து உடலைவிட்டு பிரிந்தவுடனே அதைக்கையேற்று ஒரு அச்சமும் இன்றி யேக மோக்ஷ இராச்சியத்திலே கூட்டிக்கொண்டு போய் உம்மோடும் மற்ற தூததர்களோடும் நித்தியமுஞ் சர்வேசுரனை ஸ்துதிக்கத்தக்கதாக அவர் சந்நிதியிலே ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். . ஆமென்.

# பேயோட்டும் செபம் II

(பாப்பிறை 13-ம் சிங்கராயர் அனுமதியுடன்)
"Prayer against satan and the Rebellious Angels"
by: Apostolate of Christian Action, Californkias
என்ற சுவடியிலிருந்து

பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே - ஆமென்.

எங்கள் ஆண்டவரும் இறைவனுமாகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயராலும், இறைவனின் அன்னையான அமலோற்பவ மரியாள், அதிதூதரான மிக்கேல், தூய அப்போஸ்தலரான இராயப்பர், சின்னப்பர், சகல தூயவர்களின் பரிந்து பேசுதலிலும் திடங்கொண்டு, நம்பிக்கையுடன் சாத்தானின் தாக்குதலையும் தந்திரங்களையும் அகற்றிட முன் வந்துள்ளோம்.

சங்கீதம்: 67. இறைவன் எழும்புகின்றார், அவர் எதிரிகள் சிதறுகின்றனர். அவரைப் பகைப்பவர்கள் அவர் முன்னின்று வெருண்டோடுகின்றனர். புகை வெளியேற்றப்படுவது போல் அவர்கள் ஒட்டப்படுகின்றனர். மெழுகு உருகுவது போல், தீயவர்கள் ஆண்டவர் முன் அழிந்தொழிவர்.

முதல் : † இதோ ஆண்டவருடைய சிலுவை,
சத்துருக்களே வெருண்டோடுங்கள்.

துணை : † தாவீதின் வழித்தோன்றலாகிய அவர்
யூதாவின் மரபின் சிங்கத்தினை வென்றார்.

முதல் : † இறைவனின் இரக்கம் நம்மீது இறங்குவதாக.

துணை : † உம்முடன் எங்களுக்குள்ள நம்பிக்கையின்
பெருமளவிற்குத் தக்கதாக.

குறிப்பு : † அடையாளத்தில் குருவானவராக இருந்தால் ஆசீர்வதிப்பார். இல்லறவாசி இச்செபத்தைச் செய்தால் அமைதியாக சிலுவை அடையாளத்தை வரைய வேண்டியது.

*செபம்*

நீங்கள் யாராக இருப்பினும், அசுத்த அரூபிகளே, சாத்தானின் எல்லா சக்திகளே, எல்லா நரக முற்றுகையாளர்களே, எல்லா தீய கணங்களே, கூட்டங்களே, பிரிவுகளே எங்கள் ஆண்டவரான இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தாலும், வல்லமையாலும், நீங்கள் திருச்சபையிலிருந்தும், இறைவனின் சாயலில் படைக்கப்பட்டு, தெய்வீக சாயலில் படைக்கப்பட்டு, தெய்வீக செம்மறியின் விலைமதிப்பற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆன்மாக்களிலிருந்தும் களைந்தெறியப்பட்டு, துரத்தப்படக் கடவீர்களாக.

† மிகவும் தந்திரமிக்க அரவமே, நீ இனிமேல் மனுக்குலத்தை ஏமாற்றவும், திருச்சபையை வாதிக்கவும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கோதுமையைப் புடைப்பதுபோல் துயருறுத்தவும் துணியாய் † மாபெரும் கடவுள் உனக்குக் கட்டளையிடுகிறார். † உன் ஆங்காரத்தால் இப்பொழுதும் அவர் உனக்கு சரிநிகர் சமானம் என நீ உரிமை கொண்டாடி வருகின்றாய் எல்லா மனிதருக்கும் மீட்புப் பெறவும், உண்மையின் அறிவை அடைந்து கொள்ளவும் வேண்டுமென்பதே அவர் விருப்பம். (1 தீமோத்.24)

† தந்தையாம் இறைவன் உனக்குக் கட்டளையிடுகிறார். † இறைவனாம் தூய ஆவி உனக்கு ஆணையிடுகிறார். இறைவனின் வார்த்தையால் ஊனான கிறிஸ்து உன்னைப் பணிக்கின்றார். எங்கள் மனுக்குலத்தைக் காத்திட உன் பொறாமைக்குப் பலியான அவர் தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிபவரானார். (பிலிப். 2:8)

தனது திருச்சபையை பலமான பாறையில் அமைத்து அவர் உலக முடிவுவரையில் எல்லா நாட்களிலும் தான் அதனுடன் இருப்பதால், நரக வாயில்கள் மேற்கொள்ளாது என்றார். தூய திருச்சிலுவை அடையாளம் உனக்குக் கட்டளையிடுகின்றன. மகிமை பொருந்திய இறைவனின் தாயாம் கன்னிமரியம்மாள் உனக்குக் கட்டளையிடுகின்றாள். அவள் தனது தாழ்ச்சியால் அமலோற்பவமாய் உற்பவித்த தருணத்திலிருந்து ஆங்காரத் தலையை நசுக்கினாள். இராயப்பர், சின்னப்பர் மற்றும் தூய அப்போஸ்தலர்களின் விசுவாசம் உனக்குக் கட்டளையிடுகிறது. வேதசாட்சிகளின் இரத்தமும் தூயவர்களின் தூய பரிந்து பேசுதலும் உனக்குக் கட்டளையிடுகின்றன.

இவ்வாறு சபிக்கப்பட்ட சாத்தானே, விலங்கே, நாகப் படைப்புகளே உயிருள்ள தேவனால் வெளியேறுங்கள் என்று உங்களுக்கு . கட்டளையிடுகிறோம். பரிசுத்த கடவுளால், தன் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்கு உலகின் மேல்

அன்பு கூர்ந்தார். (அரு. 3:3) கடவுள் பெயரால் கட்டளையிடுகின்றோம்.

மனிதரை ஏமாற்றுவதையும், நித்திய அழிவின் நஞ்சை அவர்களுக்கு ஊற்றுவதையும் விட்டுவிடுங்கள். திருச்சபைக்கும் அதன் உரிமைகளுக்கும் தீங்கிழைப்பதை நிறுத்தி விடுங்கள். எல்லா தந்திரங்களின் உற்பத்தியாளனும், எஜமானும் மனித மீட்பின் பகைவனுமான சாத்தானே! அப்பாலே போ! உனது வேலைகள் ஒன்றிற்குமே இடமில்லாத கிறிஸ்துவிற்கு இடமளிப்பாய். தனது இரத்தத்தின் வழியாய் தனதாக்கிக் கொண்ட ஏக கத்தோலிக்க அப்போஸ்தலிக்குத் திருச்சபைக்கு இடமளிப்பாய். இறைவனின் வல்லமை மிகு கரங்களின் முன், பணிவாய். உனக்கு நடுக்கந்தரும் தூய இயேசுவின் திருப்பெயரை நாங்கள் உரைக்கும்போது நடுநடுங்கி ஓடுவாய். இப்பெயர் நரகத்தை நடுங்கச் செய்கின்றது. இப்பெயருக்கும் பரத்தின் நலன்களும், வல்லமையும், எல்லைகளும் பணிவுடன் பணிகின்றன. இப்பெயரைக் கெரூபிம், செராபிம் முடிவில்லாது. "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், . சேனைகளின் இறைவனாகிய ஆண்டவர் தூயவர்" என ஆர்ப்பரிக்கின்றன.

முதல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

துணை : எங்கள் குரல் உம்மிடம் வருக.

முதல் : ஆண்டவர் உங்களோடும் இருப்பாராக.

துணை : உம் ஆவியோடும் இருப்பாராக.

**செபிப்போமாக:**

வானக இறைவா! பூமியின் இறைவா! வான் தூதர்களின் இறைவா! இறைவாக்கினரின் இறைவா! அப்போஸ்தலர்களின் இறைவா! வேதசாட்சிகளின் இறைவா! துதியர்களின் இறைவா! கன்னியர்களின் இறைவா! மரணத்திற்குப் பின் வாழ்வையும், உழைப்பிற்குப்பின் ஓய்வையும், அருளும் வல்லமையுள்ள இறைவா! ஏனெனில் உம்மைத்தவிர வேறு கடவுள் இல்லை,

இருக்கவும் இயலாது. காணும், காணாத பொருட்களைப் படைத்தவர் நீரே. உமது ஆட்சிக்கு முடிவும் இல்லை. உமது மகத்துவ திருமுன் நாங்கள் தெண்டனிட்டு உமது வல்லமையால், துஷ்ட அரூபிகளின் கொடுமையிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டுகிறோம். அலகைகளின் தந்திரங்கள் பொய்யுரைகள், கடுஞ்சினத் தீதுகளிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டுகிறோம். உமது வல்லமையால், துஷ்ட அரூபிகளின் கொடுமையிலிருந்து எங்களை காத்தருள வேண்டுகிறோம். உமது வன்மை மிகும் பாதுகாப்பை எமக்களித்து, நாங்கள் நலமுடன் வாழச் செய்தருள எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் உம்மை மன்றாடுகிறோம்.

எங்களைக் காத்தருளும் ஆண்டவரே!

திருச்சபையின் சமாதானத்திலும், உரிமையிலும் உமக்கு தொண்டு செய்ய உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும். திருச்சபையின் எல்லாப் பகைவர்களையும் நசுக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.

(தீர்த்தம் தெளிக்கவும்)

# தென்காசி புனித மிக்கேல் ஆலயம்

இவ்வாலயம் பழமையானது. கி.பி. 1612.ல் இவ்வாலய உபதேசியாக ஜாண் என்பவர் இருந்தாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. டச்சுக்காரர்கள் திருச்சபையின் பகைவர்கள் . அன்னார், தூத்துக்குடி, புன்னைக்காயல், மணப்பாடு, வேம்பார் என்ற இடங்களிலுள்ள ஆலயங்களை ஆயுத சாலைகளாக்கினர். ஆனால் மிக்கேல் அதிதூதர் ஆலயமோ இவர்கள் பிடியில் சிக்கவில்லை.

"எங்கெங்கும் சண்டை கலாபமாயினும்
ஏக கடவுளின் வல்லமையால்
சங்கடமின்றியே தென்காசியாலயத்
தற்காக்கப்பட்டதிந் நாள் வரையில்
(தென்காசி சர்வேசுரன் கோவில் வரலாறு)

முகமதியர், இந்துக்களால் கலாபனை எழுந்தது. ஆலயம் அழிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. இதனையறிந்த புலவர் வீரமாமுனிவர் தென்காசி விரைந்தார். அவ்வமயம் முனிவர் ஆலங்குளத்தில் வாழ்ந்து வந்தார். கிறிஸ்தவர்களுக்கு வந்துற்ற இன்னலை முனிவர் துடைத்தார்.

இந்துமத யோகி ஒருவர் ஞான நீராட்டுதல் பெற்று, கத்தோலிக்கரானார். இவரது பெயர் இராயப்பர். தனது வாழ்வாள் முழுவதும் உபதேசியாராக செயல்பட்டார். புதுக்கிறிஸ்தவனின் மகன் ஒருவன் பிணியுற்று இறந்தான். இரு தூதர்கள் அவனை மோட்சம் அழைத்துச் சென்றதை உபதேசியார் மாட்சியொன்றில் கண்டார். இச்சிறுவனின் கல்லறை மீது தூதன் சிலுவை வரைந்தார். அது நன்கு பதிந்துவிட்டது. அத்தலத்தில் ஆலயங்கட்டப்பட்டது.

"தெளிவாய் தூதரும் கல்லறை மீது
சிலுவை வரைந்த முத்திரையும்
பழுதற இங்கு புதுக்கிறிஸ்தவர்
பார்த்து ஆனந்தமடைந்தார்கள்"

(தே.ச.கோ.வ)

புனித மிக்கேல் ஆலயம் உண்டான அதேவருடம் புகழ் பெற்ற இந்து ஆலயக் கோபுரம் தீயால் அழிந்தது என்பர்.

அதிசய மிக்கேல் கோயிலுண்டானபோ
தந்த வருஷத்தில் தென்காசியின்
பதியிந்து கோவிலின் கோபுரமுச்சி
பாழானதாய் ஜன பரம்பரை (தெ.ச.கோ.வ)

இவ்வாலயத் திருநாள் மிகச் சிறப்புடன் ஆண்டுதோறும் செபடம்பர் திங்கள் 29-ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. இவ்வாலயத்தினை தரிசிப்பவர்கட்கு 40 நாள் பலனை பாப்பிறை 10-ஆம் பத்திநாதர் அளித்துள்ளார்.

# இராஜாவூர் புனித மிக்கேல் ஆலயம்

அதிதூதர் புனித மிக்கேல் இராஜாவாக கொலு வீற்றிருக்கும் இவ்வாலயம் முன்னாள் கொல்லம் மறைமாவட்ட ஆயர் பேரருட் பெருந்தகை பென்சிகர் அவர்களால் 1918-ல் கட்டப்பட்டது. இன்று இது கோட்டாறு மறைமாவட்டத்தின் முக்கியத்துவம் பெற்ற ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

அதிதூதர் உதவியை நாடி பக்தர்கள் கூட்டம் தினம் தினம் திரண்டு வந்து விழாக்கோலம் பூணுகின்றது. இவ்வழகிய ஆலயத்தில், புதுமைகள் பல நடந்து வருகின்றன. நாகர்கோவிலிலிருந்து இராஜாவூர் செல்ல பல பேருந்துகள் உள்ளன. எழில்மிகு இயற்கை காட்சிகள் இவ்வாலயத்துக்கு வரும் பக்தர்களை கவருவது இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

அவரது திருநாள் ஆண்டுதோறும் மே மாதம் முதல் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்து தினங்கள் வெகு சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. இம்மாவட்டத்திலிருந்தும், வெளி மாவட்டத்திலிருந்தும் கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி பிறமதத்தினரும் திரளாக வந்து அதிதூதரின் திருநாளை சிறப்பித்து ஆசியைப் பெற்றுச் செல்வது இவ்வாலயத்தின் மற்றொரு தனிச்சிறப்பாகும்.

பாடல்கள்

## வானவர்

பல்லவி

வானவர் தலைவோனே - எங்கள்
வாழ்க்கையின் காவலனே - இந்த
திருப்பதி ராஜாவூரினிலே என்றும்
சிறப்புறும் அதிதூதரே

சரணங்கள்

1. கடவுளின் நிகர் யாரோ - என்னும்
கனிவொரு பெயோனே - என்னும்
காசினி வாழ்ந்திடு மானிடர் ஈசனின்
தாசர்களாய் அருள்வாய்

2. அலகையை வென்றவனே - நாளும்
அகிலத்தின் காவலனே - இன்று
அலகையின் வல்யினைக் கிழித்தெறிந்து . நன்றே
உலகினைக் காத்திடுவாய்.

3. அலகையுடன் போரிடுவோம் - ஏசு
அரசினை நாட்டிடுவோம் - எங்கள்
சேனையின் காவலனாய் திகழ் - வானவ
மிக்கேல் அதிதூதனே.

## மேற்கோள் நூற்கள்


1. St. Michael the saint for our Perilous times Who is like God Published by: St. Michael's Indian Mission, Dakota

2. Prayer against Satan and the rebellious angels.

மற்றும் பல சுவடிகள்.

## நாஞ்சில் புக் ஸ்டால்
## &
## ஆப்செட் பிரிண்டர்ஸ்

கிறிஸ்தவ புத்தகங்கள்
திருப்பணி பொருட்கள்
விற்பனை செய்வதிலும்
தரமான பிரசுரத்திலும்
வளர்ந்து வரும் எமக்கு
தொடர்ந்த முன் - பின்
ஆதரவுக்கு நன்றி கூறுகிறோம்.

67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில்.
உரிமையாளர் : **N.D. ஜோசப்**

## NANJIL BOOK STALL & OFFSET PRINTERS

67/1, Court Road, Nagercoil - 629 001.
✆ : 233853

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில்